சித்தர்காடு ஊராட்சியில் திருமண மண்டபம்

* 184 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் ஊராட்சி ஒன்றியம் சித்தர்காட்டிஉள்ள (பஞ்சாயத்து) அறிஞர் அண்ணா திருமண மண்டபம் கட்டுவதற்கான வேலை எப்போது துவங்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : 24—9—1970-ல் துவங்கப்பட்டு, 4—8—1973-ல் முடிக்கப்பட்டது.

Share capital of members in Land Development Banks.

* 185 *Q.*—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to charge the procedure of collecting share capital from the loanees in the Primary Land Development Banks in Tamil Nadu ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) இந்தக் குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.?

திரு. ஆ. பரந்தாமன் : தமிழ் நாட்டில் இப்படிப்பட்ட தொடக்க நிலவள வங்கிகள் தொடங்கும்போது விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கிற நேரத்தில் அவர்களிடமிருந்து 5 சதவிகிதம்தான் பங்குத் தொகை வசூலித்தோம். ஆனால் இன்று அதை 10 சதவிகிதமாக மாற்றியிருக்கிறார்கள். எனவே அந்தச் சங்கடத்தைப் போக்க மீண்டும் 5 சதவிகிதமாக மாற்றியமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அதுதான் அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று விடை அளித்திருக்கிறேன்.

பல்லடம் வட்டத்தில் கிணறுகள் வெட்ட கடன்கள்

* 186 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பல்லடம் வட்டத்தில் புதிய கிணறுகள் வெட்ட நிலவள வங்கிகள் பணம் கொடுக்க மறுப்பதற்கான காரணங்கள் யாவை.?

1973 நவம்பர் 19]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: பல்லடம் வட்டத்தில் புதிய கிணறுகள் தோண்டுவதற்கு போதிய நிலநீர் இல்லை யென்று நிலநீர் இயக்குநர் தற்சமயம் கருதுகிறார். இருப்பினும், மேற்கொண்டு நிலநீர் அளவை நிர்ணயிக்க விரிவாகப் பரிசீலனை நடத்த முயற்சிகள் நடக்கின்றன. அதுவரை மேற்படி வட்டத்தில் புதிய கிணறுகள் தோண்ட நிலவள வங்கிகளிலிருந்து கடன் கொடுக்க இயலாத நிலை இருந்து வருகிறது.

திரு. சு. துரைசாமி: பல்லடம் வட்டத்தில் பொங்கலூர், சுல்தான்பேட்டை ஒன்றியப் பகுதிகளில் பரம்பிக்குளம்-ஆளியாறு திட்ட வாய்க்கால்கள் இருக்கின்றன. நொய்யல் ஆற்றின் இடையில் பல்வேறு அணைகள் இருப்பதால் ஆங்காங்கு புதுக் கிணறுகள் வெட்டினால் தண்ணீர் வருவதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆகவே அரசாங்கம் அதைக் கணக்கிலெடுத்து பல்லடம் வட்டத்தில் புதுக் கிணறுகள் வெட்ட விவசாயிகளை ஊக்கப்படுத்த கடன் கொடுக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இப்போது 50 கிணறுகள் புதிதாக வெட்ட ஒரு திட்டத்தை அனுமதித்திருக்கிறது. அஃதன்றி பழைய கிணறுகள் 22-க்கான ஆராய்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. கோவை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், தமிழ் நாட்டிலுள்ள மொத்த மோட்டார்களில் 18 சதவிகிதம் மோட்டார் அங்கு ஓடுகிற காரணத்தால் தண்ணீர் முன் இருந்ததைவிட இப்போது 45 அடி கீழே இறங்கிக் கொண்டு வருகிறது. ஆகவே அதுபற்றிய ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. புதிதாக நண்பர் அவர்கள் சொல்கிறபடி அந்தத் திட்டம் வந்தால், அதுபற்றியும் பரிசீலிக்கப்படும்.

Lift Irrigation Societies.

* 187 *Q.*—THIRU A. PARANDHAMAN: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) the number of "Small Farmers' Lift Irrigation Societies" functioning in Tamil Nadu as on this date; and

(*b*) the total amount of loan advanced so far?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) தமிழ்நாட்டில் 30—6—1973 முடிய, 2094 சிறு விவசாயிகள் இறைவைப் பாசனச் சங்கங்கள் இயங்கி வருகின்றன.

(இ) அவைகளுக்கு 30—6—1973 முடிய, நிலவள வங்கிகள் மூலமாக வழங்கப்பட்ட கடன் தொகை ரூ. 53,23,672.